**செ.வெ.எண்: 50** **நாள்:26.09.2018**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களாகிய விலையில்லா கறவைப் பசுக்கள் (ம) விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் 2018-19-ன் கீழ், அக்டோபர்-2018 (ம) நவம்பர்-2018-ஆகிய இரண்டு மாதங்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்களும் மற்றும் நவம்பர்-2018-ம் மாதத்திற்கு விலையில்லா வெள்ளாடுகளும் கொள்முதல் செய்து வழங்குவதற்காக, பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பான சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெற உள்ளது.

அக்டோபர்-2018 (ம) நவம்பர்-2018-ம் மாதங்களில், விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள கோவிந்தபுத்தூர், வாழைக்குறிச்சி, இடங்கன்னி, கோடாலிகருப்பூர் மற்றும் நவம்பர்-2018-ம் மாதத்தில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள கருப்பிலாக்கட்டளை, காவனூர், கயர்லாபாத், கண்டிராதித்தம், கரைவெட்டி, கீழகொளத்தூர், கவரப்பாளையம், கொடுக்கூர், கொளத்தூர், குருவாலப்பர்கோயில், கல்லாத்தூர், குணமங்களம், கடம்பூர், குமிழியம் மற்றும் மணக்குடையான் ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 02.10.2018-அன்று சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற இருக்கும் சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு மனு அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி மனுக்களை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்களிடம், முதல் கிராம சபை நடைபெறும் நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை அளித்து, 09.10.2018-அன்று நடைபெறும் இரண்டாவது கிராமசபை கூட்டத்திலும் கலந்துகொண்டு தகுதியான பெண் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட உரிய ஒத்துழைப்பு நல்கிட சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**